இருக்கின்ற 'Practical Training to Law College Students' என்பது ஒரு செல் அரித்த முறையாக இருக்கின்றது. அது. தக்க வழக்கறிஞர்களை உருவாக்கவில்லை. இதைக் கண்டறிந்த பிறகுதான் 1968-க்கு முன்பு இருந்த அப்ரண்டீஸ்ஷிப் என்ற நடைமுறையைக் கொண்டுவர பார் கவுன்சில் முயன்று கொண்டிருக்கிறது. அது விரைவில் நிச்சயமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பயிலும் மாணவர்களுக்கு செயல்முறைப் பயிற்சி அளிப்பதன் விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற பட்டதாரிகளுக்குக் கூட பயிற்சி வழங்கப்படுகிறது. மருத்துவம் படித்து கடைசியாக ஹவுஸ் சர்ஜன் பயிற்சி பெறுகின்ற மருத்துவப் பட்டதாரிகளுக்கு அரசு ஊக்கத் தொகை வழங்குகிறது. அதைப் போன்று சட்டம் பயிலும் மாணவர்களுக்கும் செயல்முறைப் பயிற்சியின்போது உதவித் தொகை வழங்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்ள விரும்புவது, வழக்கறிஞர்களுடைய பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்வதற்கு அதற்கென ஒரு பார் கவுன்சில் இருக்கிறது. அதற்கும் அரசாங்கத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய சுக துக்கங்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு பார் கவுன்சிலுக்கு இருக்கிறது. அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ, அந்த முடிவின்படி வழக்கறிஞர்களுக்கு வசதிகள் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, டாக்டர் மு. சீனியம்மாள் மற்றும் திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

43—

கரூர்-திண்டுக்கல் அகல இரயில் திட்டத்திற்கு நில ஒதுக்கீடு

*65293—டாக்டர் மு. சீனியம்மாள்:

திரு. ஓ.எஸ். அமர்நாத்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996 பிப்ரவரி 17]

கரூர்- திண்டுக்கல் அகல இரயில் பாதை திட்டத்திற்கு கரூர் வட்டத்தில் தமிழக அரசால் இரயில்வே துறையினருக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் வட்டத்தில் கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதை திட்டத்திற்கு 311.69 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. 13.05 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும் வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 324.74 ஏக்கர் நிலம் தமிழக அரசால் தென்னக இரயில்வே துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நல்ல திட்டங்களை நடுவன் அரசு கொண்டு வந்திருக்கின்றபோதிலும் மக்களுடைய நலன் கருதி தனது முழு ஆதரவைத் தந்து கொண்டிருக்கிற ஒப்பற்ற தேசியத் தலைவி டாக்டர் புரட்சி தலைவியினுடைய நல்லாட்சியில் கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதைக்கு எவ்வளவு நிலம் வழங்கப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மிக்க நன்றி. இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு அளிக்கும் பங்கு என்ன; மாநில அரசின் பங்கு என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மத்திய அரசினுடைய திட்டம். மாநில அரசிடம் வழங்கியிருக்கிறது. அது அவர்கள் செலவு, இது இவர்கள் செலவு. இதிலே மாநில அரசின் பங்கு என்ன இருக்கிறது ? திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதைத் திட்டத்திற்காக அரசின் சார்பாக பட்டா நிலம் வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் சொன்னார். புறம்போக்கு .நிலமும் வழங்கப்பட்டுள்ளதாகவும் சொன்னார்கள். உதாரணமாக, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் நெய்வேலியில் சுரங்கம் தோண்டுவதற்கு தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும் நேரத்திலே, அந்த நிர்வாகம், நிலம் வழங்கிய குடும்பத்தின் வாரிசுகளுக்கு வேலை அளிக்கின்றது. அதுபோன்று, இந்தத் திட்டத்திற்கு நிலம் வழங்கிய குடும்பத்தின் வாரிசுகளுக்கு அந்தத் துறையில் ஏதேனும் ஒரு வேலை அளிக்க இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1996 பிப்ரவரி 17

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக மத்திய அரசு ஆரம்பிக்கின்ற பொது நிறுவனங்களுக்கும் நெய்வேலி போன்ற நிறுவனங்களுக்கும் மற்றும் மற்ற மாநிலங்களிலும் அமைக்கின்றபோது மாநில அரசு நிலங்களை எடுத்துக் கொடுக்கின்றபோது அதனால் பாதிக்கப்படுகின்றவர்களான ஏழை எளிய மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து அங்கே அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற பல்வேறு மாநிலங்களும் இதைப் பின்பற்றி வருகின்றன. அந்த அடிப்படையிலே நெய்வேலியிலே நிலம் எடுக்கிறபோது நிலம் கொடுத்தவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு தரவேண்டுமென்று மாநில அரசு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தினுடைய தலைவரை வற்புறுத்தி வந்தது. அதிலே சிலருக்குக் கொடுத்திருக்கிறார்கள். சிலருக்குக் கொடுப்பதற்கு வேலை இல்லை என்று நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இந்த அரசு அதற்கு முயற்சி செய்யும். ஆனால், இப்படிப் புதிய திட்டங்களை, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ. எஸ். அமர்நாத் கேட்டபடி, இதுவரையிலும் இப்படிப்பட்ட ஒரு திட்டம் எந்த மாநிலத்திலும் இல்லை என்று கருதுகிறேன். எனக்குத் தெரியாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அமர்நாத் கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். இப்படி தனியார்களுடைய நிலங்களை எடுக்கின்றபோது அவர்கள் பாதிக்கப்படுகின்றபோது அந்த நிலத்தினுடைய சந்தை விலையை இந்த அரசும் கொடுப்பதில்லை, மத்திய அரசும் கொடுப்பதில்லை. அப்படி இருக்கும்போது பாதிக்கப்படுகின்றவர்களுக்கு, அவர்களுடைய குடும்பத்தில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை கொடுக்கலாம் என்று அவர் சொன்ன யோசனை நல்ல யோசனை. இதுபற்றி மத்திய அரசுக்கும், ரயில்வே துறைக்கும் மாநில அரசு எழுதலாம் என்று கருதுகிறேன். எழுதுவதற்கு உண்டான முயற்சிகளை நான் செய்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே துறை நிலம் எடுக்கும்போது மத்திய அரசு பணம் கொடுப்பதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டது. அது தவறானதாகும். காரணம் என்னவென்றால்—பிராட் கேஜ் என்னுடைய ஊர் வழியாகத்தான் செல்லுகிறது—அங்கே ஏழைகளாக இருந்து, தங்களுடைய குறைந்த

1996 பிப்ரவரி 17]

இடத்தை விற்றவர்களுக்கெல்லாம் கை நிறைய பணம் கொடுக்கச் சொல்லி, அவர்கள் அத்தனைப் பேரும் பணம் வாங்கியிருக்கிறார்கள். வேலை வேண்டுமானால் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. அது குறித்து அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறாக புரிந்து கொண்டார் என்று கருதுகிறேன். அரசு நிலம் எடுக்கின்றபோது, அது மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி,—பெரிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கும், தனியார் துறையாக இருந்தாலும் சரி—நிலம் எடுத்துக் கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமையாகும். அது மாநில அரசின் கடமையாகும். அப்படி எடுத்துக் கொடுக்கின்றபோது, எந்த நிலமானாலும், அதனுடைய அன்றைய சந்தை மதிப்பு என்ன இருக்கிறதோ அந்த மதிப்புத் தொகையை எந்த அரசும் கொடுப்பதில்லை. இந்த அரசும் கொடுப்பதில்லை. இதற்கு முன்னாலே இருந்த உங்கள் அரசும் கொடுக்கவில்லை என்றுதான் சொன்னேன். இன்றைக்கும் கொடுக்கப்படுவதில்லை. அன்றைக்கும் கொடுக்கப்படவில்லை. அப்படி இருக்கும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுப்பது என்பது நியாயமானது. அதைச் செய்யலாம். அதை இதுவரையில் இரயில்வே துறையும் செய்யவில்லை. பொதுத் துறையிலே செய்கிறார்கள். அதைச் செய்யலாம் என்பதைத்தான் தெரிவித்தேன் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், இங்கே சொல்லுகின்றபோது, மத்திய அரசு பணத்தை வாரி வாரிக் கொடுக்கிறது என்று சொல்லுகிறார்கள். வாரி வாரிக் கொடுப்பதற்கு—அங்கே கஜானா இருந்தாலும், நோட்டு அடித்தாலும்—அதற்கும் கணக்கு இருக்கிறது. வாரி வாரிக் கொடுக்க முடியாது. அடுத்தபடியாக சொல்ல வேண்டுமென்றால், வாரி வாரிக் கொடுப்பதில் வல்லவரான புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் நம்முடைய சென்ட்ரல் இரயில்வே ஸ்டேசன் பக்கத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டிடம் இருக்கிறதே அதைக் கட்டுவதற்கு மத்திய அரசு பணத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்தாகிவிட்டது. ஆனால் கட்ட வேண்டிய நேரத்தில் கட்டமுடியவில்லை. பணம் இல்லை என்று சொன்னார்கள். நிலத்திற்குப் பணம் கட்டமுடியவில்லை என்று சொன்னார்கள். அப்போது இருந்த அரசு பல்வேறு கடிதங்களை எழுதியது. உங்களால் எவ்வளவு பணம் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்தால் போதும், நிலத்தை ஒப்படைக்கிறோம் என்று சொல்லி, குறைந்த விலையில் நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு நிலத்தைக்

கொடுத்திருக்கிறது. இன்னும் ஒன்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்னை துரித ரயில் போக்குவரத்துத் திட்டம். அந்தத் திட்டம் வரவேண்டும் என்பதற்காக இந்த அரசும், இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களும் அந்தத் திட்டத்தைப் பெறவேண்டும் என்பதற்கு, சென்னையிலே போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது; அந்த இரயில் வேகமாக வரவேண்டுமென்று கடிதங்களை எழுதினார்கள். திட்டம் போடப்பட்டது. ஆனால் அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்படவில்லை. அது குறித்து நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்னையிலே தமிழ்நாட்டில் மத்திய பகுதியான சென்னையில் முக்கியமான இடங்களில் 48 ஏக்கர் 68 சென்ட் நிலத்தை இந்த அரசு இனமாகக் கொடுத்திருக்கிறது. இந்த அரசு கொடுத்திருப்பது எத்தனை மனை தெரியுமா ? சுமார் 884 மனைகளாகும். அந்த இடத்தில் ஒரு மனையின் விலை என்ன தெரியுமா சுமார் 50 லட்சங்கள் ஆகும். அதாவது, மொத்தம் எவ்வளவு தெரியுமா ? சுமார் 430 கோடி மதிப்புள்ள நிலத்தை இந்த அரசு இரயில்வே துறைக்கு இனாமாகக் கொடுத்திருக்கிறது என்பதைப் பணிவன்புடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பொன்னம்மாள், உங்கள் நிலத்தினுடைய மதிப்பு அளவுக்கு இந்த அரசும் கொடுக்கவில்லை, எந்த அரசும் கொடுக்கவில்லை என்றுதான் அமைச்சர் சொன்னார். ஆனால், நீங்கள் வாரி வாரிக் கொடுத்ததாகச் சொல்கிறீர்கள்.

வினா எண் 44, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

44—

மருத்துவ தீர்ப்பாயம் ஏற்படுத்துதல்

*36363—டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவ தீர்ப்பாயம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?